ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஆழியெழ ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆழியெழ ॥

எம்பெருமானது வெற்றிச் செயல்களைப் பேசுதல்

‡ஆழியெழச்⋆ சங்கும் வில்லும் எழ⋆ திசை
வாழியெழத்⋆ தண்டும் வாளும் எழ⋆ அண்டம்
மோழையெழ⋆ முடி பாதம் எழ⋆ அப்பன்
ஊழியெழ⋆ உலகம் கொண்டவாறே (1)

ஆறு மலைக்கு⋆ எதிர்ந்தோடும் ஒலி⋆ அர-
வூறு சுலாய்⋆ மலை தேய்க்கும் ஒலி⋆ கடல்
மாறு சுழன்று⋆ அழைக்கின்ற ஒலி⋆ அப்பன்
சாறுபட⋆ அமுதம் கொண்ட நான்றே (2)

நான்றில ஏழ்⋆ மண்ணும் தானத்தவே⋆ பின்னும்
நான்றில ஏழ்⋆ மலை தானத்தவே⋆ பின்னும்
நான்றில ஏழ்⋆ கடல் தானத்தவே⋆ அப்பன்
ஊன்றியிடந்து⋆ எயிற்றில் கொண்ட நாளே (3)

நாளுமெழ⋆ நில நீருமெழ⋆ விண்ணும்
கோளுமெழ⋆ எரி காலுமெழ⋆ மலை
தாளுமெழச்⋆ சுடர் தானுமெழ⋆ அப்பன்
ஊளியெழ⋆ உலகமுண்ட ஊணே (4)

ஊணுடை மல்லர்⋆ ததர்ந்த ஒலி⋆ மன்னர்
ஆணுடைச் சேனை⋆ நடுங்கும் ஒலி⋆ விண்ணுள்
ஏண் உடைத் தேவர்⋆ வெளிப்பட்ட ஒலி⋆ அப்பன்
காணுடைப் பாரதம்⋆ கையறைப் போழ்தே (5)

போழ்து மெலிந்த⋆ புன் செக்கரில்⋆ வான் திசை
சூழும் எழுந்து⋆ உதிரப் புனலா⋆ மலை
கீழ்து பிளந்த⋆ சிங்கம் ஒத்ததால்⋆ அப்பன்
ஆழ் துயர் செய்து⋆ அசுரரைக் கொல்லுமாறே (6)

www.prapatti.com

மாறு நிரைத்து⋆ இரைக்கும் சரங்கள்⋆ இன
நூறு பிணம்⋆ மலை போல் புரள⋆ கடல்
ஆறு மடுத்து⋆ உதிரப் புனலா⋆ அப்பன்
நீறுபட⋆ இலங்கை செற்றநேரே (7)

நேர் சரிந்தான்⋆ கொடிக் கோழி கொண்டான்⋆ பின்னும்
நேர் சரிந்தான்⋆ எரியும் அனலோன்⋆ பின்னும்
நேர் சரிந்தான்⋆ முக்கண் மூர்த்தி கண்டீர்⋆ அப்பன்
நேர்சரி வாணன்⋆ திண்டோள் கொண்ட அன்றே (8)

அன்று மண் நீர் எரி கால்⋆ விண் மலை முதல்⋆
அன்று சுடர்⋆ இரண்டு பிறவும்⋆ பின்னும்
அன்று⋆ மழை உயிர் தேவும் மற்றும்⋆ அப்பன்
அன்று முதல்⋆ உலகம் செய்ததுமே (9)

மேய் நிரை கீழ் புக⋆ மா புரள⋆ சுனை
வாய் நிறை நீர்⋆ பிளிறிச் சொரிய⋆ இன
ஆநிரை பாடி⋆ அங்கே ஒடுங்க⋆ அப்பன்
தீ மழை காத்துக்⋆ குன்றம் எடுத்தானே (10)

‡குன்றம் எடுத்த பிரான்⋆ அடியாரொடும்⋆
ஒன்றி நின்ற⋆ சடகோபன் உரை செயல்⋆
நன்றி புனைந்த⋆ ஓர் ஆயிரத்துள் இவை⋆
வென்றி தரும் பத்தும்⋆ மேவிக் கற்பார்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com